**நவம்பர் - 6**

**"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." - ரோம 12 . 1.**

நம்மிடமுள்ள எல்லாவற்றையும் கர்த்தருடைய ஊழியத்துக்காகக் கொடுப்பது ஒரு புத்தியுள்ள காரியம் மட்டுமல்லாமல், ஒரு மிகவும் சிறிதான காணிக்கையாயிமிருக்கிறது. நம் சார்பாக இப்படிப்பட்ட இரக்கத்தையும் கிருபையையும் தெள்ளெனக் காண்பித்திருக்கிற அவருக்கு எதைக் கொடுக்க நாம் விரும்புகிறோமோ, அதைவிட மிகவும் குறைவானதாயிருக்கிறது. இப்படிப்பட்ட நம்முடைய ஒரு பிரதிஷ்டைக்கு ஒரு கைமாறும் தீர்மானிக்கப்படாமலிருந்தாலும், இவ்விதமாகவே நாம் உணரவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் பெரிய கைமாறையும் ஆசீர்வாதங்களையும் தேவன் தீர்மானித்திருக்கிறதினாலே ஏற்றுக்கொள்வதற்கு மறுப்போமானால், தெய்வ கிருபையை நன்கு மதிக்காமலிருப்பதையே இது சுட்டிக் காட்டுவதோடல்லாமல், மனதின் பெலவீனத்தையும், நம்முடைய தீர்ப்பின் பெலவீனத்தையும் குறிக்கிறது. இது, சில குறிகிய வருஷங்களுக்குரிய சுயசித்ததின் நிரந்தரமற்ற இன்பங்களோடு, கர்த்தரோடு கொண்டுள்ள இணக்கத்திலுள்ள ஒரு நித்திய சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும், மகிமையையும் சீர்தூக்கிப் பார்க்கக் கூடாததாயிருக்கிறது. - **Z 00, 170 (R 2642).**

ஒரு பெரிய வெகுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்கிற நம்பிக்கையில் நம்மை பிரதிஷ்டை செய்யத் தூண்டுவதற்காக இந்தப் புத்திமதி கொடுக்கப்படவில்லை. ஆனால், தேவன் பேரிலுள்ள திடமான நம்பிக்கையின் காரணமாகவும், நாம் ஏற்கனவே பெற்றிருக்கிற நன்மைக்காக, ஒரு நன்றியுள்ள அன்பின் காரணமாகவும், தேவன் நல்லவராயிருக்கிறார் என்றும் நன்மை செய்கிறார் என்றும் உயர்வாக மதிக்கிற ஒரு அன்பின் காரணமாகவுமே இப்படிச் செய்ய இந்தப் புத்திமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. நீதிமானக்கப்படுத்தலில் நாம் கண்டிருக்கிறதும் அனுபவிக்கிறதுமான சத்தியத்தினால் நம்மில் உண்டுபண்ணப்பட்டிருக்கிற இந்தக் குணங்கள் நம்முடைய சொற்ப எல்லாவற்றையும் ஒப்புக்கொடுப்பதில் மாத்திரமல்லாமல், ஒரு பலியாக மரணத்தில் முற்றிலுமாக நிறைவேற்றி முடிப்பதிலும் கர்த்தருக்குக் கொடுக்க சாத்தியமாக்குகிறது. கர்த்தர் நம்மில் ஒவ்வொரு நாளும் கிரியை நடப்பிக்கிற வல்லமை, அன்பு, நீதி, ஞானம் இவைகளை அப்பியாசிப்போமானால், தேவனுடைய மகிமைக்கும்,மற்றவர்களுடைய பிரயோஜனத்துக்கும், நம்முடைய நித்திய சேஷமத்திற்கும் நம்முடைய பிரதிஷ்டையை நிறைவேற்ற நாம் சாத்தியமாக்கப்படுவோம். **- P 30, 183.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**2கொரி 10.1; சங் 50.5,14, 45.10,11; நீதி 23.26; மத் 13.44-46, 16.24; ரோம 6.13,16; 1கொரி 6.13,20; 2கொரி 8.5; எபி 10.7; 1பேது 2.5,9.**

**கோபுர வாசிப்பு : Z 14, 86 (R 5422).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் எனது பிரதிஷ்டையை நிறைவேற்றினேனா? எந்த சந்தர்ப்பங்களில் எனது பிரதிஷ்டை சோதிக்கப்பட்டது? எனது பிரதிஷ்டையின் கடமைகள் எவ்வாறு சரிக்கட்டினேன்? எது உதவியது? எது இடையூறாக இருந்தது? பலன் என்ன?**